மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) ஆம். இந்தியத் தலைமை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி நியமனத்தில் கடைபிடிக்கப்பட்ட நடைமுறைக்குத் தங்களது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு அடையாளமாக, 30-4-1973 அன்று சென்னை மாநகரிலும் வெளியூர்களிலும் உள்ள பெரும்பான்மையான நீதி மன்றங்களைப் பகிஷ்காரம் இம்மாநிலத்தைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் செய்தனர்.

THIRU N. DENNIS : May I know whether the general opinion of the Advocates has been communciated to Central Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 553, 554, 555 இவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : வினாக்கள் 553, 554, 555 இவைகள் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் பேரில் இருக்கின்றன. இவைகளைப் பின்னல் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் ஏதாவது கடிதம் அனுப்பியிருக்கிறார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வந்திருக்கிறது.

Agricultural Polytechnics

* 556 Q.—THIRU N. DENNIS :
THIRU N. KITTAPPA :
THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the State Government have been examining the feasibility of opening Agricultural Polytechnics in Coimbatore district; ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். டென்னிஸ் : இவ்வித வேளாண்மை பாலிடெக்னிக்கள் அமைப்பதால் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்த

1973 டிசம்பர் 1]

வழிவகை செய்யலாமாதலால் இவ்வித வேளாண்மை பாலிடெக் னிக்கை அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: பாலிடெக்னிக் அமைப்பது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது. ஆனால் வினா கோவையில் அமைக்கமுடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். கோவையில், இல்லை. திருச்சி மாவட்டம் குடுமியாமலையில் அமைப்பதற்கு ஒரு திட்டம் இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: கோவை மாவட்டத்தில் வேளாண்மை பாலிடெக்னிக் அமைப்பதற்கில்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். திருச்சியில் அமைக்கப் போவதாக வும் அடுத்து பதில் சொன்னார்கள். திருச்சியில் உள்ள குடுமியா மலையில் ட்ராக்டர்கள் பயிற்சி நிலையமும் அங்கு துவக்கப்பட இருப்பதால் இந்த பாலிடெக்னிக்கை அங்கு விரைவில் துவங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: அந்த பாலிடெக்னிக் தொடங்குவதற்குச் சில சிக்கல்கள் இருக்கின்றன. அந்தச் சிக்கல்கள் தீர்ந்தபின் துவங்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: இந்த வேளாண்மை பாலிடெக்னிக் திருச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பிறமாவட்டங்களுக்கு, ஏன் பிற மாநிலங்களுக்குக்கூட அரிசி வழங்கும் தன்மை பெற்றிருக்கிற தஞ்சை மாவட்டத்தில் இத்தகைய ஒரு பாலிடெக்னிக் அமைக்க இனிமேலாவது அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: பாலிடெக்னிக் என்பது என்ஜினியரிங் கல்லூரியில் எப்படி பாடம் சொல்லிக்கொடுக்கிறார் களோ அதேபோல் பாலிடெக்னிக் என்பதில் நடுத்தரமானதொரு பயிற்சி கொடுக்கப்படுகிறது. அது எந்த ஊரில் இருந்தாலும் அதில் பயிற்சி பெறுகிறவர்கள் அந்த மாவட்டத்திற்கும் சென்று வேலை செய்யலாம். ஸ்டேட் ப்ளானிங் கமிஷன் 24 பாலிடெக் னிக்குகள் தொடங்கவேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். ஆனால் அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகுதான் தொடங்கப்படும்.

[1973 டிசம்பர் 1

திரு. ஜே. ஜேம்ஸ்: அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது பாலிடெக்னிக் தொடங்குவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன என்று கூறினார்கள். அந்தச் சிக்கல்கள் என்ன என்பதனையும் அந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதனையும் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சிக்கல்கள் என்று நான் குறிப்பிட்டது இந்த பாலிடெக்னிக் நடத்துவதற்கு முழு உதவியும் மத்திய அரசு உலக வங்கியிலிருந்து பெற்றுத் தருகிறது. அத்திட்டத்தின் அடிப்படையில்தான் நாம் முதலில் இந்த பாலிடெக்னிக்கை தொடங்குவது என்று தொடங்கினோம். ஆனால் அந்தப் பணம் வரவேண்டியதில் இடையில் சிற்சில காரியங்கள் நடைபெற வேண்டியிருக்கிறது. அவை நடந்தவுடன் தொடங்கப் படும்.

திரு. நா. வீராசாமி: நம் நாடு விவசாயத் தொழிலை மைய மாகக் கொண்டிருக்கிற நாடு. இந்த நாட்டில் பாலிடெக்னிக்ஸ் திறப்பது என்பது ஒரு நல்ல வரவேற்கத் தக்க கொள்கையாகும். அப்படியிருக்கின்ற நிலைமையில் மாணவர்கள் எவ்வளவு ஆண்டுக் காலம் இந்தக் கோர்ஸ்க்கு படிக்கவேண்டும்? அவர்கள் படித்த தற்குப் பின் என்ன பட்டம் கொடுக்கப்படப் போகிறது ? எல்.ஸி.இ., எல்.இ.இ. போன்ற டிப்ளமாக்கள் இருக்கின்றன. அப்படி விவசாயத் துறையில் திறக்கப் போகிற பாலிடெக்னிக்கில் படிப்புக் காலம் எவ்வளவு ஆண்டுகள்? கொடுக்கப் போகும் அந்த டிப்ளமாவிற்கு என்ன பெயர் ? என்ற விவரங்களை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நமது மாநிலத்தில் அக்ரிகல்சுரல் என்ஜினியரிங் காலேஜ், அது கூட சென்ற ஆண்டு தான் தொடங்கப்பட்டது. அக்ரிகல்சுரல் என்ஜினியரிங் படித்து, அதிலே பரிட்சைகளில் தேறுகிறவர்களுக்குப் பட்டம் கொடுக்கப் படுகிறது (பி.ஈ. அக்ரிகல்சர்). ஆனால் பாலிடெக்னிக்கில் படிக்க கிறவர்களுக்கு டிப்ளமா கொடுக்கவேண்டும் என்று நாம் கருதுகிறோம். ஆனால், இதற்குப் பண உதவி செய்கிறவர்கள் டிப்ளமா கூட கொடுக்க வேண்டாம், டிப்ளமா கொடுத்தால் எல்லோரும் அரசாங்க வேலைகளையே கேட்டுக் கொண்டிருப் பார்கள், தனியாக செயல்படமாட்டார்கள், ஆகவே டிப்ளமா என்று கொடுக்காமல் 3 ஆண்டுகள் படித்தவர்களுக்கு சர்டிபிகேட் கொடுத்தால் போதும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.